செ.வெ.எண்:56 நாள்:17.10.2019

**தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், மந்திதோப்பு ஊராட்சி பகுதியில் 30 திருநங்கைகளுக்கு பசுமை வீடுகள் கட்டும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.**

---

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், மந்திதோப்பு ஊராட்சி பகுதியில் 30 திருநங்கைகளுக்கு பசுமை வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.10.2019) நேரில் பார்வையிட்டார். மேலும், அந்த பகுதியில் மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும் பகுதிகளையும், திருநங்கைகளுக்கான பால்பண்ணை அமையவுள்ள பகுதிகளையும் மற்றும் பொது பயன்பாட்டிற்கான இடங்கள் உள்ளிட்டவைகளையும் பார்வையிட்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-

தமிழகத்தில் வீடு இல்லாதவர்களுக்கும், கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்களுக்கு சூரிய ஒளி மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு கட்டும் திட்டம் கொண்டுவரப்பட்டு அனைத்து கிராமங்களிலும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. சொந்த வீடு இல்லாதவர்களுக்கு இந்த திட்டத்தின் மூலம் வசதியான வீடுகள் அமைத்து கொடுக்கப்படுகிறது. அதனடிப்படையில், கோவில்பட்டி பகுதியிலேயே இருக்கும் திருநங்கைகள் சொந்தமாக வீடு வேண்டும் என்ற கோரிக்கையினை மாவட்ட நிர்வாகத்திடம் கோரிக்கை வைத்தனர். இந்த கோரிக்கையினை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று 30 திருநங்கைகளுக்கு ஒரே பகுதியில் இலவச பட்டா வழங்கப்பட்டு, பசுமை வீடுகள் கட்டுவதற்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. பசுமை வீடுகளுக்கு அடித்தளம் வரை அமைக்கும் பணிகள் நிறைவு பெற்றுள்ளது. தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் திருநங்கைகளுக்கு பசுமை வீடுகள் திட்டத்தின் பயன்பெற்றிருந்தாலும், அவர்களின் வாழ்வாதாரத்தை பெருக்கும் வகையில் ஒரே இடத்தில் 27 திருநங்கைகளுக்கு பசுமை வீடுகள் கட்டப்பட்டு, அவர்களுக்கு கூட்டுறவு பால் உற்பத்தி சங்கங்களும் அமைக்கப்படவுள்ளது. இந்த கூட்டுறவு பால் உற்பத்தி சங்கமானது திருநங்கைகளின் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பகுதியில் அவர்களுக்கு பால்பண்ணையும் அமைக்கப்பட்டு அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில் கோவில்பட்டி கோட்டாட்சியர் திருமதி.விஜயா, கோவில்பட்டி வட்டாட்சியர் திரு.மணிகண்டன், கோவில்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.கிரி, திரு.முருகானந்தம், ஒன்றிய பொறியாளர் திரு.தமிழ்செல்வன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.